# நன்கொடையாக வழங்கப்பட்ட ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டம்
# ஆண்டறிக்கை 2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | நூலக நன்கொடையாளர் ஆவணங்களை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0014 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் 2020 - டிசம்பர் 2022 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | புலம்பெயர் தன்னார்வலர்கள் |

நூலக நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஓர் பகுதியாக புலம்பெயர் சமூகங்களிலுள்ள நன்கொடையாளர்களால் வழங்கப்படும் ஆவணங்களை ஆவணப்படுத்தலாக இச்செயற்றிட்டம் முன்மொழியப்பட்டது.

இதன் அடிப்படையில் புலம்பெயர் சமூகங்களில் இருந்து வெளிவருகின்ற நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் நூலக செயற்பாடுகளை அறிந்த தன்னார்வலர்களால் நூலக நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவற்றை ஆவணப்படுத்தும் நோக்கில் இச் செயற்றிட்டம் முன்வைக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வருகிறது.

புலம்பெயர் சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் அடையாளப்படுத்தல்களை குறைத்து மதிப்பிட முடியாது. அச்சமூகங்களிலிருந்து வெளிவரும் பல்வேறு ஆவணங்கள் இதனை சிறந்த முறையில் வெளியிடுகின்றன. அவ்வெளியிடுகள் ஈழத்தமிழர் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. இவ்வாறான பல அரிய ஆவணங்கள் எண்ணிமப்படுத்தலை நோக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆயினும் இச்செயற்றிட்டத்தில் தொடர்ச்சியான செயற்பாடுகள் இடம்பெறவில்லை. கொவிட் காரணமாகவும் பணியாளர்கள் இன்மையினாலும் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து போதுமான அடைவுகளும் எட்டப்படவில்லை.

இச்செயற்றிட்டம் ஊடாக 2020- 2022 களில் இடம்பெற்ற செயற்பாடுகள்

- புலம்பெயர் சமூகத்தின் பண்பாட்டுப் பரப்புக்களிலிருந்து பல்வேறு ஆவணங்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் வெளிவருகின்றன. அவை பற்றிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது.

- ஏற்கனவே சேகரிப்பில் உள்ள ஆவணங்கள் பட்டியலிடப்பட்டு அவற்றுள் அரிய ஆவணங்களை முதன்மைப்படுத்தி எண்ணிமப்படுத்துவதற்கான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன.

அடைவுகள்

| இல | ஆண்டு | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | 2020 | 453 | 45,434 |
| 2 | 2021 | 125 | 21,587 |
| 3 | 2022 | 1,707 | 175,857 |
| 4 | 2023 | 1,673 | 110,729 |
| | மொத்தம் | **3,958** | **353,607** |

எதிர்கொண்ட சவால்கள்

- நூலக நன்கொடையாளர் ஆவணங்களை ஆவணப்படுத்தும் போது முதலில் ஆவணப்படுத்த வேண்டிய நூல்களில் பட்டியல் இல்லாமையால் பல முக்கிய நூல்கள் இன்னும் எண்ணிமப்படுத்தப்படாமல் உள்ளது.
- Sheetfed Scanner இற்கான புத்தங்கள் குறைந்த அளவிலேயே காணப்படுவதால் Sheetfed Scanner க்கான அடைவுகளை அடையமுடியாமல் போனது.
- போதுமான ஊழியர்கள் இல்லாமையால் அடைவுகளை அடைவதில் சவால்கள் காணப்பட்டன.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் எத்தகைய ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் அவசியம்.
- எண்ணிமப்படுத்துவதற்கான ஊழியர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான கருவி உபகரணங்களைப் போதிய அளவில் கொள்வனவு செய்யப் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட வேண்டும். மின்வருடல் கருவிகளை பரிந்துரைத்தல்.

முடிவுரை

நூலகத்தின் நன்கொடை ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டம் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இச்செயற்றிட்டத்தின் ஊடாக இதுவரை 3,958 நூல்கள் மற்றும் ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன. எண்ணிமப்படுத்தப்பட்ட மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை 353,607 என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர நூலக நிறுவனத்தில் 125,444 பக்கங்களை கொண்ட 1,838 நூல்கள் மற்றும் ஆவணங்கள் எண்ணிமப்படுத்துவதற்காக உள்ளன.